# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 107 | புதன்கிழமை Wednesday | 15.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ரூ.139 கோடி மதிப்பில் புதிய மருத்துவ கட்டிடங்கள்

## முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்



சென்னை: "நலம் TN" என்ற தமிழ்நாடு சுகாதார அறக்கட்டளை இணையதளத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்து ரூ.139.47 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடங்கள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களை பயன்பாட்டிற்குக் கொண்டு வந்ததார்.

மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை-II) ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "சென்னை,மாநிலக்கல்லூரி வளாகத்தில்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு சுகாதார அறக்கட்டளை வழியாக அரசு மருத்துவமனை மேம்பாட்டிற்கு அறக்கட்டளை மற்றும் சமூகப் பொறுப்பு நிதி வழங்கும் வகையில் "நலம் TN" என்ற புதிய இணையதளத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்.

மேலும், 139 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடங்களைத் திறந்து வைத்து, நவீன மருத்துவ உபகரணங்களின் பயன்பாட்டினையும் தொடங்கி வைத்து, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை-II) ஆகியோருக்குப் பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

மேலும், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்கள் மற்றும் 1,393 சுகாதார ஆய்வாளர்கள் (நிலை-II) ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

"நலம் TN" இணையதளம்: தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உயர் சிறப்பு சிகிச்சைகள் வழங்குதற்காக, உள்கட்டமைப்பு மற்றும் உயர்தர மருத்துவ உபகரணங்களை மேம்படுத்தும் நோக்கில், பெரிய தொழில் நிறுவனங்கள், பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி (CSR) மற்றும் தொண்டு நிறுவனங்கள், முன்னாள் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், தனிப்பட்ட நன்கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடை பெற்று வெளிப்படையான, பொறுப்புணர்வுடன் கூடிய முறையில் செயல்படுத்தும் பொருட்டே "நலம் TN" இணையதளம் தமிழ்நாடு சுகாதாரதிட்டத்தின் கட்டமைப்பின்கீழ் உருவாக்கப்பட்டு, அதற்கான இணையதளமும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் மூலம் நன்கொடையாளர்கள் தங்களது பங்களிப்பை எளிமையான முறையில் நேரடியாகவும், பாதுகாப்பாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் வழங்க முடியும்.

தமிழ்நாட்டில் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்திடும் வகையில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின்கீழ் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொது மருத்துவப் பிரிவுக் கட்டிடத்தின் இரண்டாம் தளத்திற்கு மேல் 17 கோடி ரூபாய் செலவில் 30 படுக்கை வசதிகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, 180 படுக்கை வசதிகளுடன் கூடிய பொது மருத்துவ வார்டுகள், செவிலியர் நிலையங்கள், மருத்துவர் அறைகள், பரிசோதனை அறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கூடுதலாகக் கட்டப்பட்டுள்ள நான்கு தளங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

இதேபோல், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கத்தின் சார்பில் ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் 57 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டிடம்; புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், வத்தலகுண்டு அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும், பட்டிவீரன்பட்டி அரசு மருத்துவமனையில் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவிலும், விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அரசு மருத்துவமனையில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை முதல்வர் விஜய் திறந்துவைத்தார்.

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககத்தின் சார்பில் பல்வேறு மாவட்டங்களில் 45 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 78 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவை கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நவீன மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை மக்கள் பயன்பாட்டுக்காக முதல்வர்விஜய்தொடங்கிவைத்தார். கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவக் கட்டடங்கள் மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களின் மொத்த மதிப்பு 139 கோடியே 47 லட்சம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய வரலாற்றை படைத்திட பலம் பெறுவோம்

## தென்காசி அகழாய்வு குறித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கருத்து

சென்னை:

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கில் இருந்து தொடங்கி எழுதுவோம், வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம் என்று முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "திமுக அரசு தொடங்கிய அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழர் வரலாற்றுத் தடங்களை உலகறியச் செய்ய வேண்டும்.



தமிழரின் வரலாற்றையும் நமது பண்பாட்டையும் குறைத்துக்கூறியும், சிதைத்து எழுதியும் வருவதோடு, வரலாற்றைத் திரிபுவாதங்களால் திசை திருப்பும் சூழ்ச்சிகளும் அரங்கேறும் காலத்தில், தமிழ்த் தொன்மை உண்மைச் சான்றுகளோடு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுதான் கீழடி, பொருநை, இரும்பின் தொன்மை!

மண்ணுக்குள்ளும் ஆழ்கடலுக்குள்ளும் மறைந்திருக்கும் இன்னும் பல கீழடிகளை மேலே கொண்டு வருவோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கிலிருந்து தொடங்கி எழுதுவோம்! வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம்!" என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி கிராமத்தில் தமிழக அரசு தொல்லியல் துறை மேற்கொண்ட கள ஆய்வு மற்றும் அகழாய்வில், சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான சங்க காலத்தைச் சேர்ந்த சதுர வடிவ செங்கல் படிக் கிணறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தமிழக தொல்லியல் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதன் கள ஆய்வை தொடர்ந்து மேற்கொள்ள தற்போது பொறுப்பேற்றுள்ள அரசை மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கு:

## விசாரணையை கையில் எடுத்த அமலாக்கத்துறை

முதல்-அமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசை கவிழ்ப்பதற்கு கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி எம்.எல்.ஏ. இளையராஜாவிடம், ரூ.35 கோடி பேரம் பேசப்பட்ட விவகாரம் சமீபத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது தொடர்பாக எம்.எல்.ஏ. இளையராஜா கொடுத்த புகாரின்பேரில், திருவல்லிக்கேணி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்கள் உள்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர். சென்னை அரும்பாக்கத்தை சேர்ந்த திருநாவுக்கரசு, மேடவாக்கத்தை




சேர்ந்த தியாகராஜன், பெசன்ட் நகரை சேர்ந்த நரேஷ், கரூரை சேர்ந்த தி.மு.க. பிரமுகர்களான ரமேஷ் மற்றும் கார்த்திக் ஆகிய 5 பேர் இந்த வழக்கில் மிக முக்கியமான குற்றவாளிகளாக கருதப்பட்டனர். அவர்கள் 5 பேரிடமும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கில் ஹவாலா பணம் கைமாறி இருப்பதாகக் காவல்துறை தெரிவித்ததைத் தொடர்ந்து, இவ்வழக்கை அமலாக்கத்துறை தாமாக முன்வந்து விசாரணையைக் கையில் எடுத்துள்ளது. இந்த வழக்கில் கணக்கில் காட்டப்படாத ரூ.50 லட்சத்திற்கும் அதிகமான பணம் பறிமுதல் செய்யப்பட்டது குறித்தும் அமலாக்கத்துறை விசாரணை நடத்த உள்ளது.

மேலும், இந்த வழக்கில் செந்தில் பாலாஜி அவரது சகோதரர் இருவரும் முன் ஜாமின் பெற்றுள்ள நிலையில் அமலாக்கத்துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது. தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கு விசாரணையை அமலாக்கத்துறை கையில் எடுத்திருப்பது தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில் தவெக எம்எல்ஏ விடம் பேரம் பேசிய விவகாரத்தில் மதுரையை சேர்ந்த 4 பேரிடம் திருவல்லிக்கேணி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# விஸ்வகர்மா சமுதாயத்தினருக்கு 3.5% இட ஒதுக்கீடு வேண்டி வலியுறுத்தல்





ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவையின் மாவட்ட கூட்டம் நடைபெற்றது இந்தகூட்டத்தில்மாவட்டத்தலைவர் ஆர்.ஈஸ்வரமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளரும் மாநில அமைப்பு செயலாளர் ஆர்.மூர்த்தி மாவட்ட பொருளாளர் சங்கர்,மாநில கொள்கை பரப்பு செயலாளர் வி.இளங்கோவன் ஆகியோரது முன்னிலையில் அனைத்து கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இதில் சமூக பொருளாதார மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள விஸ்வகர்மா சமுதாயத்தினர்க்கு பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் இருந்து 3.5% இட ஒதுக்கீடு தனியாகவழங்கப்பட வேண்டும் எனவும் விஸ்வகர்மா சமுதாயத்தினர் கூலி வேலைகளை செய்து மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையிலும் உள்ளதால் தமிழக அரசு விஸ்வகர்மா சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்கி வாழ்க்கை தரம் மேம்படவும் பொருளாதாரத்தில் உயரவும் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு விஸ்வகர்மா சமுதாயத்தினரும் அரசு பணி பெற்றிட 3.5% இட ஒதுக்கீட்டை மாநில அரசு அமல்படுத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு தச்சு பொற்கொல்லர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளித்திட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வருகிற செப்டம்பர் 27ஆம் தேதி நடைபெறுகிறது தேசிய பொதுக்குழு கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் எனவும், முன்னேற்பாடுகள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.

# முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற "வீரமங்கை அக்னி 2026" மகளிர் ஹாக்கி போட்டி

## வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு அமைச்சர் சம்பத்குமார் பரிசுகள் வழங்கி பாராட்டு

தமிழக முதல்வர் சி. ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு,தமிழக வெற்றிக் கழகத்தின் கோவை புறநகர் வடக்கு மாவட்டம் சார்பில், அணியும், சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் சச்சிதானந்த ஜோதி புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜ்குமார் கலந்துகொண்டுநிகழ்ச்சியை சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சி தமிழக வெற்றிக் கழகத்தின்



மாவட்ட செயற்குழு உறுப்பினர் அம்பிகா சரவணகுமார் ஏற்பாட்டிலும், கோவை மாவட்ட ஹாக்கி சம்மேளனத்துடன் இணைந்தும், "வீரமங்கை அக்னி 2026" என்ற பெயரில் மாவட்ட அளவிலான மகளிர் ஹாக்கி போட்டி கோவை ஆர்.எஸ்.புரம் ஹாக்கி மைதானத்தில் கடந்த இரண்டு நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 8 அணிகள் இப்போட்டியில் பங்கேற்று தங்களது விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தின. இறுதிப்போட்டியில் கோவை கே.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிகேதன் பள்ளி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று "வீரமங்கைகள்" என்ற பெருமையைப் பெற்றது.

வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழக பிற்படுத்த ப்பட்டோர் நலத்துறை அமைச்சரும், கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான மாண்புமிகு சம்பத்குமார் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீராங்க னைகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

மேலும், தமிழக வெற்றிக் கழகத்தின் கோவை புறநகர் வடக்கு மாவட்ட மகளிரணி நிர்வாகிகளான தமிழ்ச்செல்வி, ரேவதி உள்ளிட்ட பல்வேறு கழக நிர்வாகிகள், கோவை மாவட்ட ஹாக்கி சம்மேளன நிர்வாகிகள், பயிற்சியாளர்கள், வீராங்கனைகள், பெற்றோர் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக வெற்றி பெற்ற வீராங்கனைகள் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கழக நிர்வாகிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடத்தினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே. ராஜீவ்அவர்கள்இன்று14.7.26பயன்பாட்டிற்குகொண்டுவந்துகர்ப்பிணிதாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை, மாநிலக் கல்லூரி அரங்கில்,மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் தென்காசி மாவட்டம் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் இன்று 14.7.26 குத்துவிளக்கேற்றி வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.கலை கதிரவன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளார்.

# வேப்பூர் அருகே சிறுவர்கள், இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி ஊக்குவிப்பு



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள சேப்பாக்கம் ஊராட்சியில், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் டாக்டர் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா மன்றத் தலைவர் பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்திற்கு மேலும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ஊராட்சி செயலாளர் தங்க. சரவணன், பொறியாளர் சச்சிதானந்தன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயராமன், முன்னாள் துணைத் தலைவர் கட்டிமுத்து, திமுக நல்லூர் வடக்கு ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பொறியாளர் மணிகண்டன் மற்றும் கூட்டுறவுத் துறை ஊழியர் அசோக் ஆகியோர் நன்கொடை வழங்கினர். அவர்கள்சிறப்புஅழைப்பாளர்களாக விழாவில் கலந்து கொண்டு, மன்ற நிர்வாகிகளுடன் இணைந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வாழ்த்தினர்.

நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் தனஞ்செழியன், எஸ்.ஏ. மணிகண்டன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒன்றிய நிர்வாகி ஆனந்தபாபு, கிராம முக்கியஸ்தர்கள் சதீஷ், நிருபர் விஜய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், டாக்டர் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான கிராமபொதுமக்கள் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



தமிழக வெற்றிக் கழகம் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் அண்ணன் மற்றும் இணைச் செயலாளர் சேக் பரித் அண்ணன் ஆகியோர் ஆலோசனைப்படி நகர செயலாளர் கதிரேசன் மற்றும் இணைச் செயலாளர் ரஜினி குமார் அவர்களின் அறிவுறுத்தலின்படி இன்று காலை தாராபுரம் 5 வது வார்டு பகுதியில் நீண்ட நாட்கள் கோரிக்கையை ஏற்று எஸ் ஜ. ஐயா மேற்பார்வையில் உடன் வார்டு செயலாளர் கிஷோர் முகமது முகமது அவர்கள் அப் பகுதியில் நீண்ட காலமாக மக்களின் துயரமாக இருந்த பெரிய சாக்கடை தூர் வார படுகிறது.கழகநிர்வாகிகளின்இந்தசெயலுக்குமக்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்தது..

# நியூஸ் 7 தமிழ் 'எழுமின் விருதுகள் 2026': நெல்லை மாவட்டத்தின் சிறந்த பள்ளியாக எஸ்.ஏ.வி. பாலகிருஷ்ணா சி.பி.எஸ்.இ. பள்ளி தேர்வு



நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சி சார்பில் வழங்கப்படும் புகழ்பெற்ற 'எழுமின் விருதுகள் -2026' வழங்கும்விழா,திருநெல்வேலி மாவட்டம் வடக்கன்குளத்தில் உள்ள எஸ்.ஏ.வி. மணிலால் அரங்கில் நடைபெற்றது. பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களைக் கௌரவிக்கும் இவ்விழாவில், கல்வித்துறையில் சிறந்து விளங்கும் நிறுவனங்களுக்கும் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

அந்த வகையில்,திருநெல்வேலி மாவட்டத்தின் சிறந்த பள்ளிக்கான விருதை வடக்கன்குளம் எஸ்.ஏ.வி. பாலகிருஷ்ணா சி.பி.எஸ்.இ (SAV Balakrishna CBSE) பள்ளி தட்டிச் சென்றது. மாணவர்களின் கல்வித்திறன், ஒழுக்கம், விளையாட்டு மற்றும் பன்முகத் திறமைகளை வளர்ப்பதில் இப்பள்ளி ஆற்றி வரும் சிறந்த சேவையைப் பாராட்டி இந்த உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

விழாவில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் இ.ஆ.ப. மற்றும் நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியின் முதன்மைச் செயல் அதிகாரி(COO)ராஜாஆகியோர்கலந்துகொண்டு, எஸ்.ஏ.வி.பாலகிருஷ்ணாசி.பி.எஸ்.இபள்ளியின் தலைவர் திரு. கிரகாம்பெல் மற்றும் தாளாளர் திவாகரன்,பள்ளியின் முதல்வர்பாலபெஞ்சமின் ஆகியோரிடம் இந்த விருதை வழங்கி வாழ்த்துகளையும் பாராட்டு களையும் தெரிவித்தனர்.

எஸ்ஏவி கல்வி குழுமங்களின் தலைவர் கிரகாம் பெல் பேசியதாவது இந்த விருது எங்கள் பள்ளிக்கு கிடைத்தது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது ஆசிரியர் மாணவர்களின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி இது என்று கூறினார்

மாவட்டத்தின் மிக உயரிய இந்த அங்கீகாரத்தைப் பெற்ற பள்ளி நிர்வாகத்திற்கும், ஆ சிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வ ருகின்றன. நிகழ்ச்சியில் ராதாபுரம் வட்டாட்சியர்வில்லுடையார்,அரசு அதிகாரிகள், ஆ சிரியர்கள், மாணவர்கள் சுற்று வட்டார பகுதியில்சேர்ந்ததிரளானபொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு பரோல் மறுக்கப்படுகிறது மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தலைவர் காயல் அப்பாஸ் குற்றச்சாட்டு

இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு பரோல்மறுக்கபடுகிறது என காயல் அப்பாஸ் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது. 2022 ஆண்டில் பாப்லர் பிரண்ட் ஆஃப் இந்தியா என்கிற அமைப்பின் மீது பணம் பறி மாற்றம் போன்ற பல்வேறு காரணங்களால் மத்திய அரசால் தடை செய்ய பட்டது . உடன் பாப்லர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பின் நிர்வாகியான அபூபக்கர் மீது வழக்கு பதிந்து கைது செய்து சிறையில் அடைக்கபட்டார். இது சம்பந்தமாக கைது செய்து 4 ஆண்டுகளாக சிறை தண்டனையை அனுபவித்தும் புற்று நோயினால் பாதிக்க பட்டுள்ள அபூபக்கர் மருத்துவ சிகிச்சை பெற பரோலில் விடுவிக்கா மல் காலம் தாழ்த்தி வருவது மனிதாபிமான மற்ற செயலாகும். மேலும். அபூபக்கர் மருத்துவ சிகிச்சை பெற உடனடியாக பரோலில் விடுவிக்க வேண்டும் என மத்திய மாநில அரசுகளை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பில் வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம் .

மேலும்தமிழகசிறைகளில் 20 ஆண்டுக்கும் மேலாகஇருக்கும்இஸ்லாமிய சிறைவாசிகள் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் கடுமையான நோயால் பாதிக்க பட்டு பலரும் உயிரிழந்து உள்னர். ஆகவே இஸ்லாமிய சிறைவாசிகளுக்கு கருணையின் அடிப்படையில் அரசியல் சாசன பிரிவு 161ன் படியும்விடுதலைசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் ஜோசப் விஜய்



அவர்களை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பாக கேட்டு கொள்கிறோம் . இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.



★மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் முள்ளிக்குளம் கிராமத்தில் TN RIGHTS திட்டத்தின் கீழ் ரூ.11.11 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சேவை மையக் ( ONE STOP CENTER) கட்டிடத்தினைமாண்புமிகுசுற்றுச்சூழல்மற்றும்காலநிலைமாற்றத்துறைஅமைச்சர்மற்றும்தென்காசிமாவட்டபொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் இன்று 14.7.26 திறந்து வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.★

## கூடங்குளம் புனித அன்னம்மாள் ஆலய திருவிழா: சாதனை மாணவர்களுக்கு முன்னாள் அதிமுக எம்.பி. சவுந்தரராஜன் பரிசு வழங்கி பாராட்டு



நெல்லை மாவட்டம் கூடங்குளம் புனித அன்னம்மாள் ஆலயத்தின் 10-ஆம் திருவிழாவை முன்னிட்டு, ஆலய வளாகத்தில் கல்விப் பரிசு வழங்கும் விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன. ஆலய பங்குத்தந்தை ரூபன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இவ்விழாவில், 2025-2 6ஆம் கல்வியாண்டில் 10மற்றும்12-ஆம்வகுப்பு பொதுத்தேர்வுகளில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது.கூடங்குளம் வட்டாரத்தைச் சேர்ந்த அரசுப் பள்ளிகள் உட்பட 6 பள்ளிகளிலிருந்து மொத்தம் 32 மாணவ, மாணவிகள் இதில் கலந்துகொண்டனர்.

கேடயம் மற்றும் கால்குலேட்டர்கள் வழங்கல்: பொதுத்தேர்வுகளில் தங்களது பள்ளிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்து சாதனை தடம் பதித்த மாணவ, மாணவிகளுக்கு, முன்னாள் அதிமுகமாநிலங்களவை உறுப்பினரும், கழக அமைப்புச் செயலாளருமான சவுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக் கலந்துகொண்டு கேடயங்கள் மற்றும் கால்குலேட்டர்களை வழங்கி வாழ்த்திப் பேசினார்.மேலும் மாணவர்களின் இந்த வெற்றிக்குக் காரணமாய் இருந்து, 100 விழுக்காடு தேர்ச்சி பெற அயராது உழைத்த ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டும் விதமாக, அவர்களுக்கு விழாவில் பொன்னாடை அணிவித்து சிறப்பு கௌரவம் செய்யப்பட்டது. இந்த விழாவில் ராதாபுரம் மேற்க்கு ஒன்றிய செயலாளர் அந்தோனி, அமலராஜா, முன்னாள் கவுன்சிலர்கள்துரைச்சாமி,சுரேஷ்குமார், வசந்தி, பாமா, அம்பிகாபதி,செந்தில்குமார் ,தமிழ்செல்வன் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் ஆலயப் பொறுப்பாளர்கள் எனப் ஏராளமானோர் கலந்துகொண்டு மாணவர்களை வாழ்த்தினர்.

## கடந்த 4 ஆண்டுகளாக கோவையில் பல்வேறு இசைத்துறையை சார்ந்த சாதனையாளர்களுக்கு வழங்கபட்டு வரும் வளுவூரார் விருதுகள் இந்த ஆண்டு 4 நபர்களுக்கு வழங்கப்பட்டது

### விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து அசத்திய வளுவூரார் க்ளாசிகல் பரதநாட்டிய ஆர்ட்ஸ் சென்டர் அமைப்பு



கடந்த 1980ம் ஆண்டு முதல், சென்னையில் நாட்டியத்துறை,இசைத்துறை, நாடகத்துறை, இசை நாட்டிய கலைகளை ஊக்குவிக்கும் சபாக்களுக்கு மற்றும் சமூக ஆர்வலர்கள், கலை ஆர்வலர்களுக்கு ஆண்டு தோறும் வளுவூரார் வாழ்நாள் சாதனையாளர்விருது எனும் விருதுகள் வழங்கபட்டு வருகின்றது.இதே போல, கோவையிலும் கடந்த 4 ஆண்டுகளாக, பல்வேறு இசைத்துறையில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கபட்டு வருகின்றது. இந்த நிலையில் 2026ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா, வளுவூரார் கலை விழா எனும் தலைப்பில் கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள மாருதி கான சபா அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை வளுவூரார் க்ளாசிகல் பரதநாட்டிய ஆர்ட்ஸ் சென்டர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இந்த அமைப்பு கடந்த 2000 ஆண்டில் கோவையில் துவங்க பட்டு, தற்போது வரை செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் 2026ம் ஆண்டுக்கான வழுவூரார் விருதுகளை, கலைமாமணி ஸ்ரீ கலா பரத், மற்றும், கலா சங்க அமைப்பாளரும், மருத்துவரும் நாட்டியமணியாகிய கீதா உபாத்யாயா ஆகிய இருவருக்கு வழங்கபட்டது.

இதனையடுத்து வழுவூர் சாம்ராஜ் வாழ்நாள் சாதனையாளர் நினைவு விருது, கலைமாமணி குரு கோவை அமுதா தண்டபாணி, மற்றும் மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை மற்றும் மயூர நாட்டியாஞ்சலி, தலைவர் பரணிதரன் ஆகியோருக்கு வழங்கபட்டது. விழாவின் ஒரு பகுதியாக வழுவூரார் ராமையா பிள்ளை இயற்றிய தெய்வீக ஆடற்கலை எனும் இரண்டாவது பதிப்பு புத்தகம் விழா மேடையில் வெளியிடப்பட்டது.

இவ்விருது வழங்கும் விழா நிகழ்ச்சிக்கு, உறுதுணையாக கலா சங்கம், ஷட்டர்பிரிக் நிறுவனம் இருந்தது. இந்த நிகழ்ச்சியில், வழுவூர் நாட்டிய பள்ளியின் பெற்றோர்கள், பெருமளவில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நாட்டிய நிகழ்ச்சிகள், வழுவூர் நாட்டிய பள்ளியின் மாணவ மாணவியர்களின் சிறப்பு நடனம், இயற்றப்பட்டதுடன், இலங்கையை சேர்ந்த தனுகா ஆர்யவர்ஷா, மற்றும் சென்னையை சேர்ந்த ஸ்ரீ கலா பரத் ஆகியோரது நடன நிகழ்ச்சி அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் அமைந்தது மேலும் மும்பை, வாரணாசி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு, வரும் கலா சங்கம் என்ற அமைப்பு கோவையிலும் துவங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் சார்பாக, புதிய புதிய கலைஞர்களின் திறமைகளை வெளிகொண்டு வந்து கொண்டு உள்ளனர். இதன் இயக்குனராக சாய்ராம் விஸ்வநாதன் பொறுப்பேற்று இதனை செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது..

## ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 2000க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்: 19வது மாதமாக தொடரும் ஆன்மீகச் சேவை



ஈரோடு தாளவாடி தலைமை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தொடர்ந்து பல்வேறு சமூக சேவைகளைச் செய்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 19-வது மாதமாகபொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக, ஆஞ்சநேயர் படத்திற்குச் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு, மகா தீபாராதனை மற்றும் பூஜைகள் நடத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்துபொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் பணி முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோ வில் செயலாளர் ரமேஷ் முன்னிலையில்நடைபெற்றஇந்நிகழ்வில்,நேதாஜி காய்கறி மார்க்கெட் கடை உரிமையாளர்கள்,விவசாயிகள்,கோவில்அறங்காவலர்கள்,அன்னதான கமிட்டியின் நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் திரளாகக் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வின் மூலம் 2,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் முதியோர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 700 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும், தலமலை ஆஞ்சநேயர் திருக்கோவிலிலும் அறக்கட்டளை சார்பாக பக்தர்களுக்கு அன்னதானம் சிறப்பாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் பரபரப்பு: பறிமுதல் செய்து நிறுத்தப்பட்டிருந்த 2 லாரிகள் தீயில் கருகின



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த, காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட இரண்டு லாரிகளில் இன்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில் லாரிகளின் முன்பகுதிகள் முற்றிலும் எரிந்து கருகின.

மத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வழக்குகள் மற்றும் விதிமீறல்கள் தொடர்பாகப் பிடிக்கப்பட்ட இரண்டு லாரிகள், பாதுகாப்பு காரணங்களுக்காக மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இன்று மதிய வேளையில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த லாரிகளில் திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியது. காற்று பலமாக வீசியதால், தீ அடுத்தடுத்து இரண்டு லாரிகளுக்கும் பரவி மளமளவென எரியத் தொடங்கியது. லாரிகள் எரியும்சத்தத்தைக்கேட்டும்,அதிலிருந்து வெளியேறிய அடர்ந்த கரும்புகையைக் கண்டும் அப்பகுதி மக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இதுகுறித்து உடனடியாக போச்சம்பள்ளி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்குத்தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போச்சம்பள்ளி தீயணைப்பு நிலைய வீரர்கள், லாரிகளில் எரிந்து கொண்டிருந்த தீயைமேலும்பரவவிடாமல் தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் கட்டுப்படுத்தி அணைத்தனர்.

இருப்பினும், தீயணைப்புத் துறையினர் தீயை அணைப்பதற்கு முன்பாகவே, இரண்டு லாரிகளின் முன்பகுதிகளும் தீயில் முற்றிலும் எரிந்து கருகி பெரும் சேதமடைந்தன.

இச்சம்பவம் குறித்து மத்தூர்போலீசார்வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், லாரிகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்தின் அருகேகொட்டப்பட்டிருந்த குப்பைக் கழிவுகளுக்கு யாரோ தீ வைத்துள்ளதாகத் தெரிகிறது.அப்போது காற்றில் பறந்து வந்த தீப்பொறி லாரிகள் மீது பட்டு, இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகவளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் தீப்பிடித்து எரிந்த இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் சிங்க பெண் காவல்துறையினர் ரீல்ஸ் எடுத்து அதனை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மட்டுமே செய்து வருகின்றனர்

### கோவை உக்கடம் பகுதியில் மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சியின் நிறுவன தலைவர் கோவை இல்முதீன் பரபரப்பு பேட்டி



கோவை மாவட்டம் உக்கடம் புல்லுக்காடு பகுதியில், மனித நேய ஜனநாயக நீதிக்கட்சியின், மாவட்ட அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து, இக்கட்சியின் நிறுவன தலைவர் கோவை இல்முதீன் இன்றைய அரசியல் நிலை குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது..

கடந்த 45 நாட்களுக்கு முன்னர் கோவையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் வகையில், மனித நேய ஜனநாயக நீதிக்கட்சி என்ற அமைப்பை உருவாக்கினோம் இதனை தொடர்ந்து இன்று கோவையில் மாவட்ட அலுவலகம் திறக்க பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், முன்னாள் முதல்வர், மு. க. ஸ்டாலின்,மற்றும் முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளதாகவும், திமுக தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதற்க்கு அக்கட்சியின், கொள்கை மற்றும் கோட்பாடுகள் எங்களை ஈர்த்துள்ளது. எனவே திமுக தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளோம். இனி நடைபெறும் உள்ளாட்சி தேர்தல்,ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தலிலும் திமுக தலைமையிலானகூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து பொதுமக்களை சந்தித்து பேச உள்ளதாக தெரிவித்தார். தொடர்த்து தமிழகத்தில் ஆட்சியமைத்துள்ள தவெக தலைமையிலான அரசு, தமிழகத்தில் முதற்கட்டமாக 717 மதுக்கடைகளை மூடியுள்ளது. அதற்க்கு நன்றிகளை தெரிவித்து கொள்வதாகவும், அடுத்த கட்டமாக தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத அரசாக இந்த தவெக அரசு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக பெண்களுக்கு பாதுகாப்பு இழுக்கு என்பது, தவெக நிர்வாகிகளால் தான் நடைபெறுகின்றது.

ஆனால் காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க முடியாமல் திணறி வருகின்றதாக குற்றம் சாட்டினார். பெண்களை பாதுகாக்க சிங்க பெண் திட்டம் தமிழகத்தில் அறிமுக படுத்தியுள்ளதாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு,

சிங்க பெண்கள் தட்டத்தின் கீழ் பணியாற்றும் காவலர்களும் பலர், ரீல்ஸ் எடுத்து அதை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். இதுவா பெண்களுக்கான சுதந்திரம், இதுவா சிங்கபெண் காவல்துறையினரின் பணி, எனவே தடுப்புகளற்ற துறையாகவும், கேள்வி எழுப்ப திராணியற்ற அரசாக இந்த அரசு செயல்பட்டு வருகின்றது என்று குற்றம் சாட்டியுள்ளார் இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது, மனித நேய ஜனநாயகநீதிக்கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் அப்பாஸ், மாநிலசெயலாளர்ஹக்கீம், மாநில தொழில்நுட்ப பிரிவு செயலாளர் அன்வர் அஹமது, மாநில சிறுபான்மையின அணி செயலாளர் இஸ்மாயில், உள்ளிட்ட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் 22ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா

## முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது





ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை இணைந்து நடத்தும் 22-ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா (31.07.2026 முதல் 11.08.2026 வரை) ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவது குறித்த முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் (13.07.2026)அன்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் புத்தகவாசிப்பை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே ஊக்குவிக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் மாவட்டந்தோறும் புத்தக கண்காட்சி ஏற்பாடு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இப்புத்தக கண்காட்சி அமைப்பதால் நூல்கள் பொதுமக்களை சென்றடைகிறது. நூல்கள் எழுதுபவர்களுக்கு அவர்களது படைப்புகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்திட வாய்ப்பாக அமைகிறது. புத்தக்கண்காட்சி என்பது கலாச்சாரத்தை மாற்றியமைக்க கூடிய அம்சம் ஆகும்.

அமையும்.ஈரோடு புத்தகத் திருவிழா- 2026 ல் 200 க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்த அரங்குகளாக வெளிநாடுகளிலிருந்தும்,பிறமாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க பதிப்பாளர்கள் வருகை தந்து அரங்குகளை அமைக்க உள்ளார்கள். மேலும், இப்புத்தகத் திருவிழாவில் புத்தகங்களுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்பட உள்ளது. காலை 11.00 மணி முதல் இரவு 9.30 வரை கண்காட்சி நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் தலைசிறந்த சொற்பொழிவாளர்கள், அறிஞர்கள் கருத்துரை வழங்க உள்ளார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் 31.07.2026 முதல் 11.08.2026 வரை நடைபெற உள்ள ஈரோடு புத்தகத் திருவிழா-2026 பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்கவும், புத்தக திருவிழாவை சிறப்பாக நடத்திட அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்திழ்ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி ,மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சி மற்றும் சிறப்பு குறைதீர் முகாம்

## மாணவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டு நிகழ்ச்சி மற்றும் சிறப்பு குறைதீர் முகாமானது மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று(14.07.2026)நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது தெரிவித்தாதவது,

மாணவர்களுக்கு கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பான எந்தவொரு பிரச்சினையும் தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கில், பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமினை சிறப்பாக நடத்தி வருகிறது. கல்வி என்பது வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக மட்டுமல்ல; ஒரு மனிதனை முழுமையான மனிதனாக உருவாக்குவதற்கான அடிப்படையாகும். சிறந்த கல்வியுடன் நல்ல பண்புகளும், சமூகப் பொறுப்புணர்வும், தன்னம்பிக்கையும் வளர வேண்டும். சுதந்திரப் போராட்ட வீரர்களும், அறிஞர்களும் காட்டிய தியாக உணர்வு மற்றும் சமூகப் பொறுப்பை மாணவர்கள் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்களின் எதிர்கால முன்னேற்ற ற்காக அரசு பல்வேறு வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள், அரசு வேலைவாய்ப்புத் தேர்வுகளுக்கான இலவச பயிற்சிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட உயர்நிலைத் தேர்வுகளுக்கானபயிற்சி, தொழில் முனைவோருக்கான பயிற்சி மற்றும் வங்கி கடன் வசதிகள் ஆகியவற்றை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்தி உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்குறைதீர் முகாமில் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களிடமிருந்து உயர்கல்வி சேர்க்கை, கல்விக் கடன், கல்வி உதவித்தொகை, சமூக, வருமானம் மற்றும் இருப்பிடச் சான்றிதழ்கள். முதல் பட்டதாரி சலுகை, மாணவர் விடுதி வசதி, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவிகள், அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பு வழிகாட்டுதல், போட்டித் தேர்வுகளுக்கானபயிற்சி, மாணவர் பேருந்து

சலுகை, ஆதார் மற்றும் வங்கி கணக்கு தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 35 மனுக்கள் வரப்பெற்றன. மாணவர்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், முதன்மைகல்வி அலுவலர் முனைவர். இ.மான்விழி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலமெடுப்பு) முரளி, மாவட்ட சமூக நீதி துறை அலுவலர் சுடலைமணி உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (14.07.2026) ஆய்வு மேற்கொண்டார். இந்த நிகழ்வில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆர். மகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பள்ளி வளாக முழுவதும் சுற்றுச் சுவர் அமைத்தல் நுழைவாயில் பெரிய அளவில் விரிவுப்படுத்தி நினைவுத் தூண் அமைத்து கொடுக்கவும் வகுப்பறைகள் , மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பெரிய அளவிலான சுத்திகரிக்கப்பு நீர் தேக்க தொட்டி அமைத்தல் , பள்ளி காலை வழிபாடு கலை நிகழ்ச்சி விளையாட்டு போட்டிகள் நடத்த கலையரங்கம் கட்டுதல். உள்ளிட்ட கோரிக்கைகளை நிறவேற்றி தர திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புமிகு சசிகாந்த் செந்தில் .இ.ஆ.ப அவர்களிடம் கோரிக்கை மனுவை தலைமையாசிரியர் வெங்கடேசன் அளித்து கோரிக்கை விளக்கினார் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவரும் பள்ளியின் தூதுவர் ( Ambassador ) சா.அருணன், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகி ஜெயக்குமார், ஆசிரியர்கள் மணிகண்டன் , இன்பராஜ், கோகுல்ராஜ் மேலும் காங்கிரஸ் தொகுதி பொருப்பாளர் சிதம்பரம், நஇர்வாகிகள் நிஷாந்த்,களில் ரஹ்மான், அப்பாஸ், ஆகியோர் உடன் இருந்தனர்

# கரூர் கோயில் நிலங்கள் விவகாரம்: அரசு முழு விவரம் தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு



மதுரை:கரூர் கோயில் நிலம் பத்திரப் பதிவு தடை நீக்கத்துக்கு எதிரான வழக்கில்,கோயில் நிலங்கள் யார் பெயர்களில் உள்ளன, நிலத்தின் மொத்த மதிப்பு என்ன என்பது போன்ற விவரங்களை தமிழக அரசு மற்றும் கரூர் மாவட்ட ஆட்சியர் தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன், உயர் நீதிமன்றமதுரை அமர்வில் பொதுநல மனு: கரூர் மாவட்டம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் கோயில் உள்ளிட்ட கோயில்களுக்கான, 15 கிராமங்களில் உள்ள 3,084.95 ஏக்கர் நிலங்களை பதிவு செய்ய பதிவுத் துறை தரப்பில் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலங்களை ஆக்கிரமித்திருந்த சுமார் 3,390 நபர்கள் அளித்திருந்த மனுக்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கரூர் மாவட்ட ஆட்சியர், பதிவுத் துறை விதித்திருந்த தடையை நீக்கி உத்தரவிட்டுள்ளார். இது முன் அனுமதி பெறாமல் கோயில் நிலங்களை பத்திரப் பதிவு செய்ய வழிவகை செய்கிறது. அது செல்லத்தக்கது அல்ல. எனவே, பதிவுக்கான தடையை பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் கார்த்திகேயன், சக்திவேல் அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், 'கரூர் மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் மற்றும் சென்னை இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் ஆகிய மூவரும் ஒரே நாளில் தடையை நீக்கி உத்தரவு பிறப்பித்து ள்ளனர்' எனக் கூறப்பட்டது.

அரசுத் தரப்பில், '80-ம் நூற்றாண்டுகளில் சில இனாம் நிலங்கள் கோயில்களுக்கு வழங்கப்பட்டன. 1965,67-ஆம் ஆண்டுகளில் ரயத்துவாரிபட்டாக்கள் வழங்கப்பட்டு, பலருக்கு மாற்றியும் விற்பனை செய்யபட்டது. இது தொடர்பாக விசாரித்ததில், 60 ஆண்டுகளுக்கும் மேலாக, மனு அளித்த நபர்கள் அங்கு வசிப்பது தெரியவந்தது. அவர்கள் கோரிக்கையின் அடிப்படையிலேயே தடை நீக்கப்பட்டது.

மனுதாரருக்கு இந்த விவகாரத்தில் தொடர்பில்லை. மூன்றாம் நபர் வழக்கு தொடர இயலாது. எனவே, மனுவை வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்' எனக் கூறப்பட்டது.

அறநிலையத் துறை தரப்பில், 'ஏற்கெனவே மனுதாரர் இந்த கோயில்களின் அறங்காவலர், செயல் அலுவலர் நியமனம் தொடர்பாக வழக்கு தொடர்ந்தார். 50 ஆண்டுகளுக்கு முன்பே செட்டில்மென்ட் பட்டா வழங்கப்பட்டவர்களின் கோரிக்கை அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், 'சம்பந்தப்பட்ட நிலங்கள் யாருடைய பெயரில் உள்ளன என்பது தொடர்பாக கரூர் மாவட்ட ஆட்சியர், தமிழக அரசுத் தரப்பில் ஜூலை 29-ம் தேதி விரிவான பதில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஆகஸ்ட் 11-ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு விசாரிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும்' என தெரிவித்தனர்.

# India condemns seafarer's killing in Hormuz, strongly protests with Iran: 'Deeply concerned'



India on Tuesday strongly condemned the attacks on two commercial vessels in the Strait of Hormuz that left an Indian seafarer dead and 10 others injured, calling them "acts of violence" that threatened safe navigation through international waterways.

In a strongly worded statement, the ministry of external affairs(MEA) said it was "deeply concerned" by the attacks on MT Al Bahiyah and MT Mombasa, which together had 30 Indian nationals among their 46-member combined crew.

The government added that 12 Indians were onboard MT Al Bahiyah, where "one has tragically lost his life and another has been injured". On MT Mombasa, which had 18 Indian crew members, nine Indians suffered injuries, including two who were reported to be seriously hurt.

"We extend our deepest condolences to the family of the deceased Indian national and wish speedy recovery to those injured," the ministry said.

The remarks came after the MEA summoned the deputy chief of mission of the Iranian embassy in New Delhi and lodged a strong protest over the attacks on ships.

The ministry also expressed profound grief over the sailor's death, extending its "deepest condolences" to the bereaved family and wishing a swift recovery to those injured in the attacks. Concern over disruption of maritime trade

New Delhi further stressed that commercial shipping and civilian infrastructure must not be targeted, warning that such attacks threaten maritime trade and global commerce.

"In particular, the targeting of commercial shipping and civilian infrastructure in the region must cease in order that free and unimpeded navigation and commerce through international waterways in the region, in keeping with international law, can be restored at the earliest," the government said.

The concern comes as the safety of the Strait of Hormuz, one of the world's busiest maritime chokepoints through which a significant share of global oil and gas shipments passes, has once again been jeopardised by renewed hostilities between Tehran and Washington DC.

The government also voiced concern over the renewed escalation. "We also reiterate our deep concern on account of the resumption of attacks and escalation of hostilities in the West-Asian region and call for immediate cessation of violence and a return to dialogue and diplomacy in the interests of peace, security and stability in the region," the statement added.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.